ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கவிஞர் பழநிபாரதியின் பூரண பொற்குடம் காட்டும் பின்நவீனத்துவம்

செ.தங்கராஜ்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு

## முன்னுரை

சமுதாயத்திற்காக, சமுதாயம் சார்ந்த நடவடிக்கைகளை சமுதாயப் பொறுப்புணர்வு மிக்க படைப்பாளர்களால் பெரிதும் வெளிப்படுத்த இயலும். அத்தகைய படைப்பாளர்களால் உருவாக்கப்படுவதே இலக்கியமாகும். இலக்கியத்தை ஒரு நாட்டின் சுயசரிதை என்று அட்சன் வரையறை செய்துள்ளார். அத்தகைய இலக்கியங்களில் தமிழுக்குக் கிடைத்த புதிய துறைகளுள் புதுக்கவிதையும் ஒன்று. தமிழ்க்கவிதை உலகம் பரந்துபட்டது மற்றும் பாரம்பரியம் மிக்கது. காலத்திற்கு ஏற்பக் கவிதைகளில் உருவ உள்ளடக்க உத்திகளில் மாற்றங்கள் ஏற்படலாயின.

அவ்வகைகளில் நவீன தமிழ்க்கவிதை உலகத்தின் முன்னனிப் படைப்பாளியாகத் திகழ்பவர் கவிஞர் பழநிபாரதி. மனித வாழ்வில் காதலின் ஆளுமையையை மிக அழுத்தமாகத் தன்னுடைய கவிதைகளில் பதிபவர். பழனிபாரதியின் கவிதை தொகுப்பான, “பூரண பொற்குடம்” என்ற கவித்துவம் மிக்க கவிதைகளில் இடம்பெற்றுள்ள பின் நவீனத்துவப் பார்வையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பின் - நவீனத்துவம்

பின் நவீனத்துவம் என்பது கலையின் சொல்நெறிகள் பற்றிய நவீனத்துவக் கலைக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டது. சிந்தனை மாற்றம், உலகியல் நோக்கு மாற்றம் காரணமாகத் தோன்றியதே பின் நவீனத்துவம் என்னும் கோட்பாடு.பின் நவீனத்துவமான தற்கால இலக்கியங்களில் வரன்முறையான ஒரு சிந்தனைச் சொல்நெறியாக, பண்பாட்டு நோக்கமாக அரசியல் பார்வையாகக் கொள்ளப்பட்டு வருகின்றது.

பின் நவீனத்துவமானது சுதந்திரமான எழுத்துக்களுக்கும், வெகுசன வாசிப்பு மற்ற எழுத்துக்களுக்கும் உள்ள இடைவெளியைத் தகர்த்து இலக்கியங்களில் புதிய பரிணாமத்தை பெறச் செய்துள்ளது.

தற்கால கவிதைப் படைப்புகளில் பின் நவீனத்துவ நோக்கமானது மறுதலிக்கப்பட முடியாத ஒரு சிந்தனைப் போக்காக அமைந்துள்ளது. அவ்வகையில் பின் நவீனத்துப் பார்வையானது

1. கலை இலக்கியத்துறையில் ஏற்பட்ட பாணி, எடுத்துரைப்பு மாற்றங்கள்
2. சிந்தனை மரபில் ஏற்பட்ட மாற்றங்கள்

என்னும் இரு கூறுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

## பூரண பொற்குடம் கவிதையில் அமைந்துள்ள பின் நவீனத்துவம்

சமூக அவலங்களையும் தன்நிலை உணர்வையும் இணைத்துப் பார்க்க முடியாத ஒரு பினைவு நிலையே பின் நவீனத்துவப் பார்வை ஆகும். அவ்வகையில் ‘பூரண பொற்குடம்’ கவிதைத்தொகுப்பில் பின் நவீனத்துவ கூறுகளான,

மையம், விளிம்பு, மனப்பதிவு வாதம், வெளிப்பாட்டு வாதம், எதிர்நிலைத்தன்மை, சிந்தனை மாற்றம் போன்ற கூறுகளில் கவிதை வெளிப்படுவதைக் காண முடிகிறது.

மையம் - விளிம்பு

தற்காலக் கவிதைப் படைப்புகளில் மையத்திற்கு முக்கியத்துவம் தராமல் விளிம்பு நிலையில் உள்ள மக்களை அடையாளப்படுத்துவதே பின் நவீனத்துவத்தின் கோட்பாடாக அமைகிறது.

மைய- விளிம்பு பின் நவீனத்துவம்

மைய அமைப்பியல் வாதத்தின் எடுகோள்களைப் பின்னுக்குத் தள்ளி புதிய சிந்தனை ஓட்டத்திற்கு வழிவகுப்பதே பின் நவீனத்துவத்தின் நோக்கமாக அமைகிறது.

“அன்பின்
சிறு இறகைப் புறக்கணித்தாலும்
உன் நினைவெளியெங்கும்
குறுக்கும் நெடுக்கும்
நிறையும் பறவைகள்” - (பூரணபொற்குடம், ப.16)

என்கிற பழநிபாரதியின் கவிதை வரிகள் புறக்கணிக்கப்பட்ட அன்பின் அவலநிலையினை எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது. இதில் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் மன நிலையினை பின் நவீனத்துவப் பார்வையில் அமைத்துள்ளார் கவிஞர்.

“ஏதோ ஒரு நட்சத்திரம்
எப்போதோ
அது வாழ்ந்திருந்த
கூடாக இருக்கக் கூடும்” - (பூரணபொற்குடம், ப.17)

“ஒரு மரத்தின்
ஓராயிரம் இலைகளில்
ஓரிலை
தத்தளிக்கிறது
உன் இதயத்தின்
திரைச் சீலையாக” - (பூரணபொற்குடம், ப.20)

“உழவாரக் குருவிகளின் கீச்சொலி
காற்றை
இன்னும் இன்னும் என
முத்தமிட்டபடி இருந்தது”

என்ற கவிதைகளில் நிலையாமை, தவிப்பு, நினைவலைகள் போன்ற விளிம்புநிலை வாழ்வியல் சிந்தனைகளை கவிதைகளில் பழநிபாரதி அவர்கள் களமாக்கியுள்ளார்.

மனப்பதிவு வாதம்

கவிஞர்கள் தங்கள் மனதில் வெளிப்படும் உணர்வுகளைக் கவிதைகளில் குறியீடுகளாகவும், படிமக்களாவும் எழுதுவர். ஆனால், கவிஞர் பழநிபாரதி அவர்கள் தனது மனதில் எழும் உணர்வுகளை எழுத்துக்களில் பதிய வைக்கின்றார். இவ்வாறு கவிஞர்கள் தங்கள் மனதில் வெளிப்படும் உணர்வுகளை சமுதாயத்திற்கோ, வாசர்களுக்கோ பயப்படாமல் துணிச்சலாய் எழுதும் திறன் பெற்றவர்கள். மனப்பதிவு வாதத்தில் தேர்ச்சிப் பெற்றவர்கள் கவிஞர்கள். கவிஞர் பழநிபாரதி தன்னுடைய மனப்பதிவு வாதத்தினை,

“அதேதடம்
காற்று
பூவைக் கொஞ்சம்
இடம் பெயர்த்து வைத்திருந்தது
என்ன நினைத்ததெனத் தெரியவில்லை
எதையோ
நினைத்துக் கொண்டிருந்தது
அணில்” - (பூரணபொற்குடம், ப.23)

என்று இயற்கையின் வெறுமையாக மேற்கண்ட கவிதை வரிகளில் பதிவு செய்கிறார். மேலும்,

“படித்து முடியாத புத்தகத்தின்
இடைப் பக்கத்தில்

*என்*
*பக்க அடையாளமாக இருக்கிறது*
*உன் கூந்தலிலிருந்து*
*நீயறியாமல்*
*என் கண்களில் விழுந்து*
*சரிந்த அந்த மலர்" - (பூரணபொற்குடம், ப.25)*
*"தனக்கு மேல்*
*ஒரு பறவையைப் போல*
*வட்டமிடுகிறது*
*உன் வீட்டின் வரைபடம்" - (பூரணபொற்குடம், ப.26)*

*என்னும் கவிதைகளில் தனது மனப்பதிவினை பதிவு செய்கிறார். இதில் பெண்களின் வாழ்வியல் பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது.*

*வெளிப்பாட்டு வாதம்*

*சமூகத்தில் நடைபெறும் அவலங்களை பெண்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை விவாதத்தின் வாயிலாக வெளிப்படுத்தும் பாங்கே பின் நவீனத்துவ நோக்கமாகும். அவ்வகைய்இல் கவிஞர் பழநிபாரதி தனது பூரண பொற்குடம் கவிதைத் தொகுப்பில் பெண்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாகக் கீழ்வரும் கவிதைகளை அமைத்துள்ளார்.*

*"ஒவ்வொரு பூவையும்*
*முதற்பூவாய் பார்த்தாய்*
*இப்போது*
*கடைசிப்பூ*
*எதுவெனத் தெரியவில்லை" - (பூரணபொற்குடம், ப.34)*
*"இந்நேரம்*
*இவ்விடத்தில் நின்று*
*இப்படிப்பாட*
*அந்தப் பறவைக்கு*
*அப்படி என்ன சோகம்*
*கடந்து வந்த இரவா*
*கடக்க வேண்டிய பகலா" - (பூரணபொற்குடம், ப.35)*

*என்னும் கவிதைகளில் விதவைப் பெண்களின் அவலநிலையையும், கடந்துவரும் வாழ்வியல் துன்பங்களையும் அழுத்தமாகப் பதிவிடுகிறார்.*

*எதிர்நிலைத் தன்மை*

*பின் நவீனத்துவமானது விடய நோக்கு, பகுப்பாய்வு ஆகிய இரண்டையும் எதிர்க்கும் முறைமையினால் காரண விளக்கம், அறிவியல் ஆகியவற்றை எதிர்க்கிறது. இதனால் அறிவு என்பது மறுதலிக்கப்படுகிறது. இதனை பழநிபாரதியின்,*

*"அறுக்கப்பட்ட*
*ஒரு பெருமரம்*
*வயது வளையங்கள் தெரிய*
*மேசையாகியகியிருந்தது*
*அந்த அறையில்*
*அதன் மீது*
*அப்போது வந்தமர்ந்த பறைவை*
*எப்போது திரும்பும் எனத்*
*தெரியாத அவகாசத்தில்" - (பூரணபொற்குடம், ப.39)*

*என்னும் கவிதை விளக்கும். இதில் மரத்தின் மனம், பெருமை, பறவைகளின் பரிதவிப்பு ஆகியன எதிர்நிலைத் தன்மையாக பின் நவீனத்துவ பார்வையோடு கவிஞரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.*

*சிந்தனை மாற்றம்*

*கவிஞனின் சிந்தனை மாற்றமே பின் நவீனத்துவத்திற்கு வித்திடுகிறது. காலந்தோறும் கவிஞனின் சிந்தனை வழி மாற்றம் ஏற்படுகிறது. அச்சிந்தனை கவிதயாக வெளிப்படுகிறது.*

*"காலம் இறுகிய சுவரில்*
*முன்நினைவுக்கும்*
*பின் நினைவுக்கும் இடையில்*
*உரைந்து நிற்கிறது*
*அடிக்கலக் குருவி*
*காட்சி மங்கிய அதன் கண்களில்*
*காற்றில்*
*கலைந்தாடுகிறது*
*மாதவி மலர்" - (பூரணபொற்குடம், ப.44)*

*என்பதில் அடிமைப்பட்ட பெண்கள் வெளியேறத் துடிக்கும் வாழ்வியலை, பறவையோடு ஒப்புமைப்படுத்தி புதிய சிந்தனையைக் கவிஞர் பழநிபாரதி முன்வைக்கிறார்.*

*நிறைவுரை*

*பின் நவீனத்துவம் என்பது இலக்கியங்களில் ஒரு புதிய உணர்வு முறையினை தோற்றுவிப்பதாகும். கவிஞர் பழனிபாரதி தன்னுடைய கவிதைகளில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த விரும்பு பின் நவீனத்துவக் கூறுகளான மைய விளிம்பு, மனப்பதிவு வாதம், வெளிப்பாட்டு வாதம், எதிர்நிலைத் தன்மை, சிந்தனை மாற்றம் ஆகிய கூறுகளின் வழி தன் கருத்தினை முன் வைக்கும் விதத்தினை மேற்கண்ட கட்டுரை பதிவு செய்கிறது.*

*ஆய்வுக்குத் துணைநின்ற நூல்*


1. *பழநிபாரதி - பூரணபொற்குடம் - தமிழ்வெளி பதிப்பகம்*
   *பாரதிதாசன் தெரு,*
   *சீனிவாசா நகர், மலையம்பாக்கம்,*
   *சென்னை - 600122*
   *முதற்பதிப்பு, ஏப்ரல் 2021*


********* ********* ********** ********* ********* ********** ********** **********